**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **செந்தில்குமார்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் அரசு காலனியில் வசித்து வருகிறேன். நான் ஊர்க்காவல் படையில் பணிபுரிகிறேன். கடந்த 20.01.2022 ஆம் தேதியன்று பசுபதிபாளையம் காவல்நிலைய எல்லைக்கு கட்டுப்பட்ட புலியூர் புறக்காவல்நிலையத்திற்கு பணிக்கு சென்றிருந்தேன். அன்று காவலர் 1833 கந்தசாமியும், 210 சரவணக்குமாரும் புறக்காவல்நிலையத்தில் பணியிலிருந்தோம். இரவு 10.30 மணிக்கு ஹரிஹரன் என்பவர் ஒரு கல் எடுத்து செக்போஸ்ட்டில் உள்ள கதவு மற்றும் ஜன்னல் கண்ணாடியை உடைத்தார். ஆஜர் எதிரி ஹரிஹரனை சாட்சி சரியாக பார்த்து அடையாளம்

காண்பித்தார். மேலும் அவ்வாறு கல் தூக்கி எரியும்போது என்னையும் மற்ற காவலர்களையும் தகாத வார்த்தையால் திட்டினார். ஆஜர் எதிரி ஒரு கல் எடுத்து உடைத்தார். ஆஜர் எதிரி கல் எடுத்து அடித்ததில் ஜன்னல் கண்ணாடி உடைந்தது. மேலும் பிரதான கண்ணாடி கதவும் உடைந்தது. பின்னர் 1833 காவலர் கந்தசாமிக்கு போன் செய்து தகவல் கொடுத்தேன். கந்தசாமியும், சரவணக்குமாரும் வந்தார்கள். காவல்துறையினரை பார்த்து ஆஜர் எதிரி கெட்டவார்த்தையால் திட்டினார். திட்டிவிட்டு ஆஜர் எதிரி ஓடிவிட்டார். நாங்கள் ஆஜர் எதிரியை துரத்தி பிடிக்க சென்றோம் அவர் ஓடிவிட்டார். பின்னர் கந்தசாமி காவலர் பசுபதிபாளையம் காவல் ஆய்வாளருக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். அதன்பிறகு நான் மேற்சொன்ன புறக்காவல்நிலையத்தில் தான் இருந்தேன். **அன்று எதிரி வீசிய கல் இது தான். அது ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புறக்காவல்நிலையத்தின் ஜன்னல் கண்ணாடி உடைந்தது. அந்த ஜன்னல் கண்ணாடிகள் இதுதான். அது ஏற்கனவே அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

## <u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

புலியூர் புறக்காவல்நிலையத்தில் ஒரு கண்ணாடி ஜன்னல் உள்ளது. ஜன்னல் கண்ணாடிகளுக்கு கிரில்கள் கிடையாது. ஜன்னல் கண்ணாடியும், கதவும் நேர்க்கோட்டில் இல்லை. நீங்கள் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரி அங்கு வரவில்லை என்றும் கல் கொண்டு ஜன்னலில் எரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி உங்களையும் மற்ற காவலர்களையும் திட்டவில்லை

என்று சொன்னால் சரியல்ல. காற்றில் ஜன்னல் கண்ணாடி உடைந்ததை எதிரிதான் உடைத்தார் என்று தவறாக புரிந்து கொண்டு எதிரி மீது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஊர்க்காவல்படையில் நீங்கள் பணிபுரிவதால் காவல்துறையினருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.13 17:38:13 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சிதம்பரம் | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது புலியூர் கணேசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். என் முன்னிலையில் எந்த கல்லும், கண்ணாடியும் கைப்பற்றவில்லை. கடந்த 21.01.2022 ஆம் தேதி இரவு கோழி லோடு வருவதாக தகவல் கிடைத்தது. சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து காவல்துறையினர் என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள். காவல்துறையினர் சாட்சியாக இருக்கும்படி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் முன்னிலையில் கடந்த 21.01.2022 ஆம் தேதியன்று இரவு 1.30 மணியளவில் நீங்களும் தங்கராஜும் புலியூர் கோழிக்கடையில் இருந்தபோது காவல்துறையினர் சம்பவ இடத்திலிருந்த அ.சா.பொ.1 கல்லையும், அ.சா.பொ.2 கண்ணாடித்துண்டுகளையும் கைப்பற்றி அந்த கைப்பற்றுதல் மகஜரில் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை. தேதி எனக்கு நியாபகமில்லை. நீங்கள் எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.13 17:38:28 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: தங்கராஜ்** | **Father's Name** | **:** |
| **Village** | **:** | **Taluku** | **:** |
| **Caste** | **:** | **Calling** | **:** |
| **Religion** | **:** | **Age** | **:** |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது புலியூர் வடக்குப்பாளையம் குமரன் பார்க்கில் குடியிருந்து வருகிறேன். என் முன்னிலையில் எந்த கல்லும், கண்ணாடியும் கைப்பற்றவில்லை. சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து காவல்துறையினர் என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள். காவல்துறையினர் சாட்சியாக இருக்கும்படி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் முன்னிலையில் கடந்த 21.01.2022 ஆம் தேதியன்று இரவு 1.30 மணியளவில் சிதம்பரம் மற்றும் உங்கள் முன்னிலையில் புலியூர் கோழிக்கடையில் இருந்தபோது காவல்துறையினர் சம்பவ இடத்திலிருந்த அ.சா.பொ.1 கல்லையும், அ.சா.பொ.2 கண்ணாடித்துண்டுகளையும் கைப்பற்றி அந்த கைப்பற்றுதல் மகஜரில் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.13 17:38:41 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சந்திரசேகர்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது க.பரமத்தி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2022 தேதியன்று பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் உள்ள மு.நி.கா. 1833 கந்தசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று புகாரின் அடிப்படையில் பசுபதிபாளையம் காவல் நிலையக் குற்ற எண்.48/2022, சட்டப்பிரிவுகள் 294 பி மற்றும் 3 தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம்விளைவித்தல் தடைச்சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வாதியின் புகாரையும் முதல் தகவல்

அறிக்கை அசலையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர் அவர்களுக்கு துரித தபால் மூலம் அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுககும் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1833 காவலர் கந்தசாமி புகார்கொடுப்பதற்கு முன்பாக போனில் மேற்படி சம்பவத்தை பற்றி புறக்காவல்நிலையத்தில் இருந்து போது தகவல் கொடுத்தாரா என்றால் சரிதான். கந்தசாமி போனில் தகவல் சொன்ன பிறகு காவல்நிலையத்திற்கு அரைமணி நேரம் கழித்து வந்தார். கந்தசாமி போனில் தகவல் சொன்னவுடன் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. ஜன்னல் கண்ணாடி காற்றில் உடைந்துவிட்டது என்றும் அதனை சரிசெய்வதற்காக ஆஜர் எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆலோசனை செய்த பிறகுதான் புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.13 17:38:49 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.